ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

வெளியிடுபவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
திகதி 2018.10.29

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2018 ஓகத்து

**பொதுநோக்கு**

2018 ஓகத்தில் வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் குறைந்தளவில் காணப்பட்டது. இம்மாத காலப்பகுதியில் வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை, ஏற்றுமதி வருமானமானது இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட வளர்ச்சியை விஞ்சிக் காணப்பட்டமையின் காரணமாக ஓராண்டிற்கு முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் சிறிதளவு குறுக்கமடைந்து காணப்பட்டது. அதேவேளை, நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய உட்பாய்ச்சல்கள் சுற்றுலா மற்றும் சுற்றுலாவிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட சிறிதளவு அதிகரிப்பு, தொழிலாளர் பணவனுப்பல்களில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பனவற்றின் காரணமாக 2018 ஓகத்தில் தொடர்ந்தும் மிதமானதாகவே காணப்பட்டது. தேறிய அடிப்படையில் சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கு இம்மாத காலப்பகுதியில் வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தமைக்கு அரச பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை ஆகிய இரண்டிலுமிருந்து வெளிநாட்டு முதலீடுகள் எடுப்பனவு செய்யப்பட்டமையும் தொடர்ச்சியான படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளுமே காரணங்களாக அமைந்தன. இவ்வபிவிருத்திகள் ஐ.அ.டொலரின் பரந்த அடிப்படையிலான வலுப்படுத்தல்களுடன் சேர்ந்து செலாவணி வீதம் வீழ்ச்சியடைவதற்கு தொடர்ச்சியான அழுத்தங்களை ஏற்படுத்தின. இதனால் செலாவணி வீதத்தில் தேவையற்ற மிகையான தளம்பல்கள் ஏற்படுவதனைக் கட்டுப்படுத்துவதற்காக உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் மத்திய வங்கி தலையிட வேண்டிய அவசியத்தினைத் தோற்றுவித்தது. 2018 ஓகத்து இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 8.6 பில்லியனுக்கு குறைந்தது.

## அட்டவணை 1: வெளிநாட்டுத்துறைச் செயலாற்றத்தின் தொகுப்பு (அ)

| வகை | ஓகத்து 2017 ஐ.அ.டொ. மில் | ஓகத்து 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சனிவரி - ஓகத்து 2017 ஐ.அ.டொ. மில் | சனிவரி - ஓகத்து 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 1,001 | 1,037 | 3.7 | 7,413 | 7,842 | 5.8 |
| இறக்குமதிகள் | 1,857 | 1,887 | 1.6 | 13,597 | 15,083 | 10.9 |
| வர்த்தக மீதி (தேறிய) | -856 | -850 | | -6,184 | -7,240 | |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 354 (ஆ) | 372 (இ) | 4.9 | 2,609 (ஆ) | 2,935 (இ) | 12.5 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 600 (ஈ) | 534 | -10.9 | 4,820 (ஈ) | 4,777 | -0.9 |
| கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல் (தேறிய) (உ) | 76 | -6 | | 328 | 44 | |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் (மொத்தம்) | 752 | 198 | | 4,410 | 4,142 | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் | 140 | 75 | | 1,074 | 657 | |
| நீண்ட காலக் கடன்கள் | 62 | 123 | | 836 | 985 | |
| கூட்டுக் கடன்கள் | 550 | - | | 1,000 | - | |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | - | - | | 1,500 | 2,500 | |
| விரிவாக்கப்பட்ட நிதிய வசதிப் பெறுகைகள் | - | - | | 167 | 252 | |
| வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (ஊ) | | | | 567 | 1,353 | |
| திரண்ட நிலுவை | | | | 2,175 | 474 | |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை,

(அ) தற்காலிகமானது.

(ஆ) 2017 இற்கான நாளொன்றிற்கான தங்கியிருக்கும் காலம் மற்றும் சராசரிச் செலவு மதிப்பீடுகள் பற்றி இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டுப் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு திருத்தப்பட்டது.

(இ) 2018 இற்கான அதன் அளவீட்டுப் பெறுபேறுகளை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை வெளியிட்டதும் இத்தற்காலிக மதிப்பீடு திருத்தம் செய்யப்படலாம்.

(ஈ) திருத்தப்பட்டது.


(உ) இரண்டாந்தரம் மற்றும் முதனிலைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஊ) ஒவ்வொரு காலப்பகுதியினதும் முதல் மூன்று மாதங்களுக்கான கிடைக்கத்தக்க தரவுகள் இலங்கை முதலீட்டுச் சபையினால் பதிவுசெய்யப்பட்டவாறான நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்களையும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான தேறிய நேரடி முதலீடுகளையும் உள்ளடக்குகிறது.

### வர்த்தக நிலுவை

2018 ஓகத்தில் ஏற்றுமதி வருவாய்கள் இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட வளர்ச்சியிலும் பார்க்க விரைவான வேகத்தில் அதிகரித்தமையின் காரணமாக வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் குறுக்கமடைந்தது. இருப்பினும்கூட, 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறை 2017இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் விரிவடைந்தது.


**வரைபடம் 1: மாதாந்த வர்த்தக நிலுவை**




மூலம்: இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றம்**

**வரைபடம் 2: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்**




மூலம்: இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி

தொடர்ந்தும் மூன்றாவது மாதமாக ஐ.அ.டொலர் 1 பில்லியனை விஞ்சிய வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2018 ஓகத்தின் ஐ.அ.டொலர் 1,037 மில்லியனுக்கு (ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில்) 3.7 சதவீதத்தினால் அதிகரித்தது. இவ்வளர்ச்சி முக்கியமாக வேளாண்மை மற்றும் கனிப்பொருள் ஏற்றுமதிகள் வீழ்ச்சியடைந்த வேளையில் கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான உயர்ந்த செயலாற்றத்தின் மூலம் முக்கியமாக அடையப்பட்டது. கைத்தொழில் ஏற்றுமதிகளின் கீழ் ஐரோப்பிய ஒன்றியச் சந்தைகளுக்கான ஏற்றுமதிகளில் வீழ்ச்சி காணப்பட்டமைக்கிடையிலும் ஐக்கிய அமெரிக்கா மற்றும் இந்தியா, யப்பான், அவுஸ்திரேலியா மற்றும் கனடா போன்ற பாரம்பரியமற்ற சந்தைகள் என்பனவற்றிலிருந்தான அதிகரித்த கேள்வியைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 2018 ஓகத்தில் புடவைகள் மற்றும் ஆடைகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தன. மேலும், இம்மாத காலப்பகுதியில் இறப்பர் உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் உயர்வடைந்தன. இதற்கு அனைத்துத் துணை வகைகளிலும் குறிப்பாக, இறப்பர் ரயர்களில் காணப்பட்ட சிறந்த செயலாற்றமே காரணமாகும். 2018 ஓகத்தில் பெற்றோலிய உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் கணிசமாக அதிகரித்தமைக்கு ஏற்றுமதி அளவுகளில் வீழ்ச்சி பதிவுசெய்யப்பட்ட போதும், பன்னாட்டுச் சந்தைகளில் எண்ணெய் விலைகளில் ஏற்பட்ட உயர்விற்கு நிகராக நீர்க்கல எரிபொருள் மற்றும் வானூர்தி எரிபொருட்களின் உயர்ந்த ஏற்றுமதி விலைகளே காரணமாகும். இம்மாத காலப்பகுதியில் உணவு, குடிபானம், மற்றும் புகையிலை என்பனவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் அதிகரித்தமைக்கு தயாரிக்கப்பட்ட புகையிலை, காய்கறிகள், பழவர்க்கங்கள், விதைத் தயாரிப்புக்களில் குறிப்பாக, தேங்காயுடன் தொடர்பான உற்பத்திகள் மற்றும் என்பனவற்றில் காணப்பட்ட சிறந்த செயலாற்றமே காரணமாகும். மேலும், பொறிகள் மற்றும் எந்திர சாதனங்கள், அடிப்படைய உலோகங்கள் மற்றும் அவற்றின் பொருட்கள் மற்றும் இரசாயன உற்பத்திகள் என்பனவற்றிலிருந்தான வருவாய்கள் 2018 ஓகத்தில் அதிகரித்து கைத்தொழில் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பிற்குப் பங்களித்தன. எனினும், தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணிகள், இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் என்பனவற்றிலிருந்தான வருவாய்கள் இம்மாத காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, இம்மாத காலப்பகுதியில் வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு தயாரிக்கப்படாத புகையிலை மற்றும் இறப்பர் தவிர்ந்த பெரும்பாலும் அனைத்து வகைகளினதும் மோசமான செயலாற்றமே காரணமாக அமைந்தது. தேயிலையின் குறைந்த சராசரி ஏற்றுமதி விலைகள் மற்றும் ஏற்றுமதி அளவுகள் என்பனவற்றின் இணைந்த தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் தேயிலையின் ஏற்றுமதி வருவாய்கள் 2018 ஓகத்தில் வீழ்ச்சியடைந்தன. இம்மாத காலப்பகுதியில் வாசனைத்திரவியங்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் குறைவடைந்தமைக்கு கறுவா தவிர்ந்த பெரும்பாலும் மற்றைய அனைத்து வகைகளினதும் மோசமான செயலாற்றமே காரணமாகும். மேலும், தெங்கு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் குறைவாக இருந்தமைக்கு தேங்காய்த் துருவல் மற்றும் தேங்காய் எண்ணெய் போன்ற தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் குறைவடைந்தமையே காரணமாகும். 2018 ஓகத்தில் இலங்கையின் வணிகப்பொருள் ஏற்றுமதிகளுக்கான முன்னணிச் சந்தைகளாக ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், இந்தியா, சேர்மனி மற்றும் இத்தாலி என்பன விளங்கி மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 52 சதவீதத்திற்கு வகைகூறின.

**அட்டவணை 2: வணிகப்பொருட்கள் ஏற்றுமதியிலிருந்து வருவாய்கள்(அ)**


| வகை | ஓகத்து 2017 ஐ.அ.டொ. மில் | ஓகத்து 2018 ஐ.அ.டொ .மில் | மாற்றம் (%) | சன - ஓகத்து 2017 ஐ.அ.டொ. மில் | சன - ஓகத்து 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **740.1** | **808.0** | **9.2** | **5,562.5** | **6,085.3** | **9.4** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 34.8 | 40.1 | 15.4 | 259.1 | 311.1 | 20.1 |
| விலங்குத்தீன் | 4.8 | 7.6 | 56.9 | 50.0 | 73.6 | 47.2 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 433.2 | 467.1 | 7.8 | 3,283.4 | 3,451.7 | 5.1 |
| இதில் ஆடைகள் | 402.3 | 436.2 | 8.4 | 3,088.1 | 3,222.2 | 4.3 |
| புடவைகள் | 19.8 | 22.8 | 15.2 | 137.9 | 166.0 | 20.4 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் | 11.1 | 8.1 | (27.4) | 57.4 | 63.5 | 10.5 |
| இறப்பர் உற்பத்திகள் | 71.0 | 80.5 | 13.4 | 538.1 | 584.4 | 8.6 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 25.6 | 24.5 | (4.4) | 166.9 | 195.3 | 17.0 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 32.7 | 37.4 | 14.5 | 242.1 | 295.7 | 22.1 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 6.4 | 8.7 | 35.2 | 138.1 | 91.1 | (34.0) |
| பெற்றோலிய உற்பத்திகள் | 40.1 | 47.0 | 17.3 | 252.7 | 387.9 | 53.5 |
| இரசாயன உற்பத்திகள் | 12.7 | 16.0 | 25.5 | 96.6 | 114.7 | 18.8 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 11.4 | 11.0 | (2.8) | 90.3 | 92.5 | 2.4 |
| அச்சிடல் பொருட்கள் மற்றும் எழுதுகருவிகள் | 4.0 | 4.9 | 21.1 | 28.0 | 19.3 | (31.2) |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 16.5 | 11.2 | (31.9) | 107.0 | 101.9 | (4.7) |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 5.8 | 6.5 | 11.5 | 47.2 | 50.7 | 7.4 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 11.4 | 16.2 | 43.1 | 72.3 | 108.0 | 49.4 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 2.8 | 3.5 | 23.5 | 22.1 | 20.8 | (5.7) |
| ஏனையவை | 26.9 | 25.8 | (4.0) | 168.5 | 186.6 | 10.7 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **255.4** | **225.4** | **(11.7)** | **1,815.0** | **1,723.4** | **(5.0)** |
| தேயிலை | 131.3 | 116.1 | (11.6) | 1,002.7 | 970.2 | (3.2) |
| இறப்பர் | 2.6 | 2.7 | 3.2 | 28.7 | 23.0 | (19.7) |
| தேங்காய் | 33.8 | 31.1 | (7.9) | 240.1 | 209.4 | (12.8) |
| வாசனைத்திரவியங்கள் | 50.2 | 41.6 | (17.2) | 248.7 | 225.6 | (9.3) |
| காய்கறிகள் | 2.5 | 2.2 | (12.1) | 19.5 | 18.3 | (6.2) |
| தயாரிக்கப்படாத புகையிலை | 3.5 | 3.8 | 8.7 | 23.5 | 23.6 | 0.5 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 13.4 | 10.0 | (25.5) | 96.6 | 84.0 | (13.0) |
| கடலுணவு | 18.0 | 17.9 | (0.2) | 155.4 | 169.4 | 9.0 |
| **3. கனிமங்கள் மற்றும் ஏனையவை** | **5.2** | **3.9** | **(24.2)** | **35.8** | **33.7** | **(6.0)** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **1,000.6** | **1,037.4** | **3.7** | **7,413.4** | **7,842.4** | **5.8** |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை

**வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்**

**வரைபடம் 3: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்**




மூலம்: இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி

2018 ஓகத்தில் வணிகப்பொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 1,887 மில்லியனுக்கு 1.6 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில்) அதிகரித்தமைக்கு எரிபொருள் மற்றும் ஊர்திகளின் இறக்குமதி மீது ஏற்பட்ட உயர்ந்த செலவினமே முக்கிய காரணமாகும். இடைநிலைப்பொருட்களின் கீழ் இம்மாத காலப்பகுதியில் எரிபொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு இறக்குமதி அளவுகளில் குறைப்புக் காணப்பட்டமைக்கிடையிலும் மசகெண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் உயர்ந்த இறக்குமதி விலைகளே காரணமாகும். மேலும், புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள், இரசாயன உற்பத்திகள், பிளாத்திக்கு மற்றும் அதன் உற்பத்திப்பொருட்கள், கனிப்பொருள் உற்பத்திகள் என்பன மீதான செலவினம் கணிசமாக அதிகரித்தது. எனினும், தங்கம் அடிப்படை உலோகங்கள் மற்றும் கோதுமை, சோளம் என்பன இக்காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன. நுகர்வுப்பொருட்களின் கீழ் தனியாள் உந்து ஊர்திகளின் இறக்குமதி 2018 ஓகத்தில் தொடர்ந்தும் ஒன்பதாவது மாதமாக, ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், தொடர்ந்தும் அதிகரித்தமைக்கு 1,000 உருளை இயலளவிற்குக் குறைவான உந்து ஊர்திகள், கலப்பு மற்றும் மின்னியல் ஊர்திகள் என்பனவற்றின் உயர்ந்த இறக்குமதிகள் பெருமளவிற்குக் காரணமாக அமைந்தன. எனினும், அதிகரித்த இறக்குமதிகளிலிருந்து சென்மதி நிலுவையின் மீது ஏற்பட்ட அழுத்தங்களைப் பரிசீலனையில் கொண்டு மத்திய வங்கியும் அரசாங்கமும் உயர்ந்த உந்து ஊர்திகளின் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் பல வழிமுறைகளை மேற்கொண்டன. இதன்படி, 1,000 உருளை இயலளவிற்குக் குறைவான, கலப்பு மற்றும் மின்னியல் உந்து ஊர்திகளின் இறக்குமதி மீதான ஏற்புடைத்தான வரிகளை 2018 ஓகத்து 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் மேல் நோக்கித் திருத்தியதுடன் 2018 செத்தெம்பர் 19 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வர்த்தகமல்லா ஊர்திகளின் இறக்குமதிகள் மீதான நாணயக் கடிதத்திற்கெதிராக 100 சதவீத எல்லை வைப்புத் தேவைப்பாடு விதிக்கப்பட்டது. மேலும், வர்த்தகமல்லா ஊர்திகளின் இறக்குமதிகள் மீதான நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லை வைப்புத் தேவைப்பாடு 200 சதவீதங்களுக்கு அதிகரிக்கப்பட்ட வேளையில் கலப்பு உந்து ஊர்திகள் தொடர்பில் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிக்களுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் 2018 ஒத்தோபர் 1 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 70 சதவீதத்திலிருந்த 50 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு சலுகை அடிப்படையிலான ஊர்தி அனுமதிப்பத்திரங்களை மட்டுப்படுத்தப்பட்டதொரு காலப்பகுதிக்கு இடைநிறுத்தி வைப்பதாக அறிவித்தது. இக்கொள்கை வழிமுறைகளுடன் ஊர்திகளின் இறக்குமதிகள் மீதான செலவினம் இனிவரும் மாதங்களில் வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், பாற்பண்ணை உற்பத்திகள், மருத்துவம் மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் போன்ற நுகர்வுப்பொருட்கள் இம்மாத காலப்பகுதியில் அதிகரித்த வேளையில் அதிகரித்த உள்நாட்டு நிரம்பல் காரணமாக அரிசி இறக்குமதி மீதான செலவினம் குறைவடைந்தது. எனினும், குறிப்பட்ட இன்றியமையாதனவல்லாத நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிகள் மீது நாணயக் கடிதங்கள்/ ஏற்றுக்கொள்ளலுக்கெதிரான ஆவணங்களின் நியதிகளுக்கெதிராக குறைந்தபட்சம் 100 சதவீத காசு எல்லை வைப்புத் தேவைப்பாடுகள் போன்ற அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட வழிமுறைகளும் இலங்கை ரூபாவினை மாற்றுகின்றமையின் மூலமான இன்றியமையாதனவல்லாத பொருட்களுக்கான

கொடுப்பனவுகளைச் செய்ய அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் வெளிநாட்டுச் செலாவணியினை விடுவிப்பதன் மீது விதிக்கப்பட்ட தடையும் இன்றியமையாதனவல்லாத நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிகள் மீதான அதிகரித்த செலவினத்தினூடாக சென்மதி நிலுவை மீது ஏற்படும் அழுத்தத்தினைக் குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், 2018 ஓகத்தில் முதலீட்டுப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் வீழ்ச்சியடைந்தமைக்குப் பெரும்பாலும் அனைத்துத் துணை வகைகளிலும் ஏற்பட்ட குறைந்த செலவினங்களே காரணமாகும். 2018 ஓகத்தில் சீனா, இந்தியா, யப்பான், சிங்கப்பூர் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் என்பன முக்கிய இறக்குமதி நாடுகளாக விளங்கி மொத்த இறக்குமதிகளில் ஏறத்தாழ 55 சதவீதத்திற்கு வகைகூறின.

**அட்டவணை 3: வணிகப்பொருட்கள் இறக்குமதி மீதான செலவினம்(அ)**

| வகை | ஓகத்து 2017 ஐ.அ.டொ.மில் | ஓகத்து 2018 ஐ.அ.டொ.மில் | மாற்றம் (%) | சன - ஓகத்து 2017 ஐ.அ.டொ.மில் | சன - ஓகத்து 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **393.8** | **431.2** | **9.5** | **2,950.1** | **3,441.3** | **16.7** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 147.9 | 128.6 | (13.0) | 1,204.5 | 1,148.1 | (4.7) |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 22.7 | 1.7 | (92.6) | 185.0 | 113.2 | (38.8) |
| இதில் அரிசி | 21.3 | 0.4 | (98.2) | 176.4 | 100.9 | (42.8) |
| பால் உற்பத்திகள் | 22.9 | 40.9 | 78.3 | 202.9 | 231.2 | 13.9 |
| காய்கறிகள் | 32.7 | 25.3 | (22.8) | 235.7 | 220.4 | (6.5) |
| கடலுணவு | 18.7 | 19.3 | 3.5 | 147.7 | 136.0 | (7.9) |
| வாசனைத்திரவியங்கள் | 8.0 | 11.0 | 37.6 | 64.3 | 73.1 | 13.7 |
| சீனி மற்றும் சிற்றுாண்டிகள் | 19.1 | 8.9 | (53.7) | 188.8 | 180.8 | (4.2) |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 23.7 | 21.5 | (9.1) | 180.1 | 193.4 | 7.4 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 245.9 | 302.6 | 23.1 | 1,745.6 | 2,293.2 | 31.4 |
| தனியாள் ஊர்திகள் | 72.6 | 142.7 | 96.5 | 505.0 | 1,092.4 | 116.3 |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 44.5 | 49.5 | 11.2 | 334.9 | 349.2 | 4.3 |
| ஆடை மற்றும் துணைப்பொருட்கள் | 41.1 | 25.1 | (38.9) | 262.3 | 214.6 | (18.2) |
| தொலைத்தொடர்பூட்டல் கருவிகள் | 23.1 | 24.6 | 6.4 | 175.0 | 184.7 | 5.5 |
| வீட்டுச்சாதனப் பொருட்கள் | 21.3 | 20.6 | (3.2) | 168.2 | 158.7 | (5.7) |
| வீட்டு உபயோகப்பொருட்கள் மற்றும் தளபாட விடயங்கள் | 20.7 | 14.9 | (28.0) | 119.3 | 112.1 | (6.0) |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 22.5 | 25.1 | 11.6 | 180.8 | 181.4 | 0.4 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **1,020.8** | **1,061.6** | **4.0** | **7,271.7** | **8,356.8** | **14.9** |
| எரிபொருள் | 312.5 | 398.6 | 27.6 | 2,152.8 | 2,768.8 | 28.6 |
| இதில் மசகெண்ணெய் | 76.9 | 108.9 | 41.6 | 391.1 | 595.3 | 52.2 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 232.7 | 289.6 | 24.4 | 1,587.7 | 2,026.2 | 27.6 |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 74.4 | 9.9 | (86.7) | 474.6 | 518.4 | 9.2 |
| இதில் தங்கம் | 65.4 | 0.1 | (99.9) | 402.7 | 438.0 | 8.8 |
| புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் | 237.4 | 247.8 | 4.4 | 1,781.3 | 1,857.9 | 4.3 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| இரசாயன உற்பத்திகள் | 74.9 | 77.4 | 3.2 | 549.9 | 601.9 | 9.5 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 56.6 | 59.9 | 5.9 | 407.9 | 471.7 | 15.6 |
| தாள் மற்றும் அட்டை மற்றும் அதன் பொருட்கள் | 44.6 | 47.9 | 7.4 | 311.6 | 345.7 | 11.0 |
| அடிப்படை உலோகங்கள் | 52.3 | 34.6 | (33.8) | 353.0 | 415.6 | 17.7 |
| கனிம உற்பத்திகள் | 12.9 | 31.6 | 145.2 | 121.6 | 129.7 | 6.6 |
| உணவுத் தயாரிப்புக்கள் | 23.3 | 27.5 | 18.4 | 200.7 | 207.9 | 3.6 |
| கோதுமை மற்றும் சோளம் | 31.3 | 23.9 | (23.6) | 225.2 | 235.9 | 4.8 |
| வளமாக்கி | 14.3 | 14.5 | 1.5 | 64.0 | 153.3 | 139.4 |
| ஏனையவை | 86.4 | 87.9 | 1.7 | 629.1 | 650.0 | 3.3 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **438.7** | **393.5** | **(10.3)** | **3,237.7** | **3,212.2** | **(0.8)** |
| பொறி மற்றும் கருவி | 224.3 | 222.7 | (0.7) | 1,738.3 | 1,703.0 | (2.0) |
| கட்டடப்பொருட்கள் | 153.9 | 134.2 | (12.8) | 1,054.8 | 1,013.0 | (4.0) |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 59.7 | 36.0 | (39.7) | 438.6 | 492.0 | 12.2 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 0.8 | 0.5 | (29.5) | 6.0 | 4.3 | (29.6) |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **3.6** | **0.8** | **(77.0)** | **137.5** | **72.3** | **(47.4)** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,856.9** | **1,887.1** | **1.6** | **13,597.0** | **15,082.7** | **10.9** |


மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை

**நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய உட்பாய்ச்சல்கள்**


2018 ஓகத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2017இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் மிதமான அதிகரிப்பினைப் பதிவுசெய்து ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 4.9 சதவீத வளர்ச்சியைக் கொண்டிருந்தது. இதன் விளைவாக முதல் எட்டு மாத காலப்பகுதியில் மொத்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 1,582,835 ஆக விளங்கி, ஆண்டிற்கு ஆண்டு மொத்த வளர்ச்சியான 12.5 சதவீதத்தினைக் காட்டியது. இது ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 2,935 மில்லியன் கொண்ட சுற்றுலா வருவாய்களைப் பிரதிபலித்தது. சுற்றுலா வருகைகளில் கணிசமான வளர்ச்சி ஐக்கிய இராச்சியத்திலிருந்து பெறப்பட்டதுடன் ஓகத்தின் சுற்றுலாவின் வளர்ச்சிக்கு இது பங்களித்த வேளையில் இம்மாத காலப்பகுதியில் மத்திய கிழக்கிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்பட்டது. அதேவேளை, தொழிலாளர் பணவனுப்பல்களும் கூட 2018 ஓகத்தில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 10.9 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைப் பதிவுசெய்து 2017இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்களில் ஏற்பட்ட சிறிதளவு வீழ்ச்சிக்கு வழிவகுத்தன.

**வரைபடம் 4: சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் முதல் ஐந்து மூலங்கள்**




மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

**வரைபடம் 5: சுற்றுலாவிலிருந்தான வருகைகள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள்**




மூலங்கள்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை,
உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்,
இலங்கை மத்திய வங்கி


## நிதியியல் பாய்ச்சல்கள்

கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை மற்றும் அரச பிணையங்கள் சந்தை இரண்டிற்குமான வெளிநாட்டு முதலீடுகள் 2018 ஓகத்தில் தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தன. முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைப் பாய்ச்சல்கள் இரண்டினையும் உள்ளடக்கிய கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் வெளிநாட்டு முதலீடுகள் ஐ.அ.டொலர் 6 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன. இதன் விளைவாக, முதல் எட்டு மாதங்களில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான ஒன்றுசேர்ந்த தேறிய உட்பாய்ச்சல்கள், இரண்டாந்தரச் சந்தையிலிருந்தான ஐ.அ.டொலர் 26 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சல் மற்றும் இக்காலப்பகுதியில் முதலாந்தரச் சந்தைக்கான ஐ.அ.டொலர் 70 மில்லியன் கொண்ட உட்பாய்ச்சல் என்பனவற்றின் தேறிய விளைவாக ஐ.அ.டொலர் 44 மில்லியனாகக் காணப்பட்டது. அரச பிணையங்கள் சந்தை தொடர்ந்தும் ஓகத்து மாதத்திலும் வெளிநாட்டு முதலீடுகளின் மீளப்பெறுகைகளையே கொண்டிருந்தது. இதன் விளைவாக, தேறிய அடிப்படையில் ஐ.அ.டொலர் 86 மில்லியன் கொண்ட வெளிப்பாய்ச்சலொன்று காணப்பட்டது. ஒன்றுசேர்ந்த அடிப்படையில் அரச பிணையங்கள் சந்தையிலிருந்தான தேறிய வெளிப்பாய்ச்சல் 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 315 மில்லியனாக விளங்கின.

## பன்னாட்டு ஒதுக்குகள்

2018 ஓகத்து இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 8.6 பில்லியனில் மதிப்பிடப்பட்டதுடன் இது 4.6 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகக் காணப்பட்டது. இதன் விளைவாக மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2018 ஓகத்து இறுதியில் ஐ.அ.டொலர் 11.0 பில்லியனாக விளங்கி 5.9 மாத இறக்குமதிகளுக்குச் சமனானதாகக் காணப்பட்டது.

**வரைபடம் 6: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் திரண்ட நிலுவை**





மூலம்: இலங்கை மத்திய வங்கி

## செலாவணி வீத அசைவுகள்

2018 ஒத்தோபர் 29 வரையான இவ்வாண்டு காலப்பகுதியில் இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 11.6 சதவீதத்தினால் தேய்வடைந்தது. மேலும், குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இலங்கை ரூபா இக்காலப்பகுதியில் இந்திய ரூபா தவிர்ந்த அனைத்து முக்கிய நாணயங்களுக்கெதிராகவும் தேய்வடைந்தது. ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபா நலிவடைந்தமையானது முக்கியமாக உலகளாவிய ரீதியில் ஐ.அ.டொலர் பரந்த அடிப்படையொன்றில் வலுவடைந்து அரச பிணையங்கள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் இறக்குமதிச் செலவினத்திற்கான கேள்வி என்பனவற்றினைப் பிரதிபலித்தது.

**வரைபடம் 7: ஐ.அ.டொலரொன்றிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**

| நாணயம் | 2017 | 2018 ஒத் 29 வரை உயர்வு (+) / தேய்வு (-) |
|---|---|---|
| ஐ.அ.டொலர் | -2.0% | -11.6% |
| யூரோ | -13.5% | -7.4% |
| பவுண் ஸ்ரேலிங் | -10.5% | -7.4% |
| யப்பானிய யென் | -5.1% | -12.4% |
| கனேடியன் டொலர் | -8.6% | -7.9% |
| அவுஸ்திரேலிய டொலர் | -9.0% | -2.8% |
| இந்தியன் ரூபா | -7.5% | +1.3% |

மூலம்: இலங்கை மத்திய வங்கி